4. தொழில் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைகள் குறித்த விதி 110–ன்கீழ் முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் துறை சிறப்பாகச் செயல்படும் வகையில், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

> *"இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட*
> *பெயலும் விளையுளும் தொக்கு"*

இயல்பாக ஆட்சி நடத்திடும் ஆட்சியாளர் நாட்டில் பருவ மழை பெய்து, விளைச்சலும் நன்றாக விளைந்து நிறையும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னும் வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கு இலக்கணமாய்த் திகழும் எங்கள் இயக்கத்தின் இமையே, இமயத்துப் புகழே, இரக்கத்தின் வடிவே, ஈடில்லா வரமே, வேதனைகள் தீர்த்த எங்கள் வெற்றித் திருமகளே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிநின்று, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் துணைகொண்டு, நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் நாடி, அவர்களின் உரிமைகள் பேணிப்,பேரவை விதி 110–ன்கீழ் 3 முத்தான அறிவிப்புகள் மற்றும் மாற்றுத்

திறனாளிகள் வாழ்வில் ஏற்றம் பெற பேரவை விதி 110–ன்கீழ் 3 மணியான அறிவிப்புகள் ஆகியவற்றை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் சார்பிலும், மாற்றுத் திறனாளிகள் துறை சார்பிலும் என் நன்றிகளை உரித்தாக்கி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தரத்திற்கு ஒப்பாக சிப்காட் தொழிற் பூங்காக்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், தொழில் வளர்ச்சி பெறவும், தொழிற்சாலைகள் தொடர்ந்து பெருகிடவும், இளைஞர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கிடவும் ஏதுவாக இன்றையதினம் 96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சி மாவட்டம், மணப்பாறையில் தொழிற் பூங்கா அமைக்கப்படும்; 52 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் உள்ள தொழிற்பேட்டையில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என இரண்டு அறிவிப்புகளைச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தொழில் துறையின் சார்பாகத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையை மேலும் மேம்படுத்தும் விதமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் முத்தான 5 அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் உன்னதத் திட்டமான* NEEDS *திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மானியத்தின் உச்சவரம்பு 25 இலட்சம் ரூபாயிலிருந்து 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்; அதேபோன்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சியத் திட்டமான* Vision *2023–ஐ நினைவூட்டும் விதத்தில் தமிழ்நாடு*

புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை அறிவிக்கப்படும்; புத்தாக்க கண்டுபிடிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்கில் புத்தாக்கப் பற்றுச் சீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்; காஞ்சிபுரம் மாவட்டம், ஆலத்தூரில் புதியதாகத் தொழிற்பேட்டை அமைக்கப்படும்; இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை பன்னாட்டுமயமாக்கும் வகையிலும், அந்நிய நாட்டு ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகளை ஈர்க்கும் வண்ணமும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு உருவாக்கப்படும் என்பது போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகளை வெளியிட்டமைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது சார்பிலும், துறையின் சார்பிலும், ஒட்டுமொத்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

5. தகவல் கோரல்

(அ) திரைப்பட நடிகர் திரு. S.Ve. சேகர் கைது செய்யப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திரைப்பட நடிகர், திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் பத்திரிகைத் துறையில் இருக்கக்கூடிய ஊழியர்கள், குறிப்பாக, பெண்களை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, சற்றுப் பொறுங்கள். அதுகுறித்து என்னுடைய கவனத்திற்கு வந்தவுடனே, அதைப்பற்றி அரசிடம் விசாரித்தேன். அது என்னவென்று கேட்டேன். அவர்கள் சொல்கிற பதில் என்னவென்றால், நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை,

திரு. மு.க. ஸ்டாலின்: இல்லை, நீதிமன்றம்தான் arrest பண்ணச் சொல்லி உத்தரவு போட்டிருக்கிறது.